(ஏ) வசதியற்ற குடும்ப மாணவர்களைத் தெரிவுசெய்து அம்மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கு இயலும்விதமாக புத்தகங்கள் உட்பட பாடசாலை உபகரணங்கள் மற்றும் நிதியுதவிகளை வழங்கி உதவிசெய்தல்;

(ஐ) அறிவியற் கற்கைகளின் முன்னேற்றத்திற்காக தகவல் தொழில்நுட்ப நிலையங்களைத் தாபித்தல்;

(ஒ) வீடற்ற ஏழைக் குடும்பங்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல்; அத்துடன்

(ஓ) வேலையற்ற இளைஞர் யுவதிகளை சுயதொழிலில் ஈடுபடுத்துவதனூடாக அவர்களின் பொருளாதார வளத்தை விருத்திசெய்தல்;

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் முகாமையும் நிருவாகமும் தவிசாளர், பிரதித் தவிசாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் பதினொரு பேரைக்கொண்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்கத் தெரிவுசெய்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் சபை ஒன்றின்மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஸ்தாபக உறுப்பினரான கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் பந்துல லால் பண்டாரிகொட பணிப்பாளர் சபையின் ஆயுட்காலத் தவிசாளராதல் வேண்டுமென்பதுடன், அதன்பின்னர் அவரது நெருங்கிய உறவினர் பணிப்பாளர் சபையின் அடுத்த தவிசாளராதலும் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர்கள் சபையானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகித்த நிருவாக சபையின் உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

